அருள் ஒளி



சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள் சிறப்பு மலர்

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை – 2018

130

எப்பிறப்பில் எம் குருக்களைக் காண்போம்?

மண்ணில்
17-02-1961

விண்ணில்
10-02-2018

எங்கள் தேவஸ்தானத்தில் அல்லும் பகலும்
அந்தண சிரேஷ்டராக அரும்பணியாற்றி
அமரத்துவம் அடைந்த
குருக்கள் ஐயாவுக்கு
எமது இதயபூர்வமான பிரார்த்தனைகளைச்
சமர்ப்பிக்கின்றோம்.

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழுர்நாயகம் அவர்கள்

மாசி மாத மலர்

2018

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3

சைவ சமயத்தவர்களின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய மன்னார் சம்பவம்

மன்னார் புண்ணிய பூமி. பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரம் முதல் பல சைவத் திருக்கோவில்கள் உள்ள சிவபூமி. சோழ மன்னர்கள் இலங்கையை ஆண்ட காலத்தில் மன்னாரில் பல திருக்கோவில்களை புனருத்தாரணம் செய்ததாக வரலாறு கூறுகிறது. அந்நியர் படையெடுப்பால் 1505 முதல் எம்மண்ணில் சுதேசிகளின் புராதன தலங்களை அழிக்கும் வேலை ஆரம்பமாயிற்று. அந்நியரால் மதம் மாற்றப்பட்டவர்கள் வழியில் வந்தவர்களால் தமது ஆதிப் பூர்வீகத்தை உணர்வதாக இல்லை. மன்னாரில் சைவசமயத்தை ஓரம்கட்ட முயற்சி செய்வது உணரக்கூடியதாக உள்ளது. இது சைவமக்களின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

சைவமக்களின் மிகவும் மகத்துவம் வாய்ந்த சிவராத்திரி நாளில் வழிபாட்டுத் தலங்கள் சிலவற்றில் விக்கிரகங்களை உடைத்து புனிதமான வழிபாட்டிடங்களை மாசுபடுத்தியவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்தல் ஆட்சி அதிகாரங்களில் உள்ளவர்களின் தலையாய கடமையாகும். இச்சம்பவங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்வதாக மன்னார் சைவ அமைப்புக்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக சைவ சமய அமைப்புக்கள் தொடர்ந்து

கண்டனங்களைத் தெரிவித்து வரும் நிலையில் தக்க நடவடிக்கைகளை பொறுப்பானவர்கள் எடுத்ததாகத் தெரியவில்லை. பல அரசியல் பிரமுகர்கள் இவ்விடயம் தொடர்பாக மௌனமாக உள்ளனர். தேர்தலில் வாக்குத் திரட்டுவதற்கு வசதியாக, சில வேளைகளில் சமய ரீதியான தவறை எடுத்துரைப்பதில் அலட்சியமாக இருப்பது உண்மை.

இந்நாட்டிலுள்ள சமயங்களில் ஆதிச் சமயம் சைவம் என்பதை உண்மை வரலாறுகள் எடுத்துரைத்தவண்ணமுள்ளன. திருக்கேதீஸ்வரத் திருக்கோவிலை இந்திய அரசு பல கோடி ரூபா செலவில் கருங்கற் கோவிலாக மாற்றிவருவது வரலாறு உணர்ந்தே. சைவ மக்களின் வரலாற்றை, வழிபாட்டுத் தலங்களை அழிக்க முற்படுபவர்கள் இனிமேலும் தொடர்வார்களானால் அதனால் ஏற்படும் சமூகச் சூழல் என்னவாகுமென எண்ணிப்பார்க்கமுடியவில்லை.

– ஆசிரியர்

சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

தொடர்புகளுக்கு

கலாநிதி ஆறு. திருமுருகன்
021 - 222 6550

கண் வைத்திய நிபுணர்
Dr. ச. குகதாசன்
021 - 222 3645

மாவை ஆதீனகர்த்தாவின் பிரார்த்தனை உரை

அகிலேஸ்வரக் குருக்கள் அவர்கள் தெல்லிப்பழை துர்க்காபுரம் துர்க்கையம்மன் ஆலயத்தில் கடந்த 45 வருடங்களாக பிரதம குருவாக இருந்து உலக மக்களின் அன்புக்கு பாத்திரமாகி மிகுந்த ஆன்மீக பக்தியுடன் சேவையாற்றி எல்லாம்வல்ல துர்க்கையம்பாளின் பாதார விந்தங்களில் தன்னை அர்ப்பணித் துள்ளார்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு மாவை ஆதீன கர்த்தாவும் தொண்டர்களும் அன்பர்களும் மீளாத்துயரில் ஆழ்ந்து அதிர்ச்சியடைந்துள்ளனர். இவ்வேளையில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மாவைக்கந்தனதும் துர்க்கையம்மனதும் பாதாரவிந்தங்களை வணங்கி இறைஞ்சுவோமாக. அன்னாரின் பந்துக்களுக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றோம்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

இங்ஙனம்

மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்

ஆதீனகர்த்தா,

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்.

தர்மசாஸ்தா குருகுல அதிபரின் பிரார்த்தனை உரை

துர்க்கையம்பாள் உபாசகர் சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள்

சிவஸ்ரீ வாஞ்சிநாத ஐயர் அகிலேஸ்வரக்குருக்கள் அவர்கள் என்னுடைய சிரேஷ்ட சிஷ்யர்களில் ஒருவர் என்பதில் நான் மிகப் பெருமையடைகிறேன். அவர் அன்னை துர்க்காதேவியின் ஆலயத்தில் பிரதமகுருவாகச் சேவையாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். பக்தர்கள் எல்லோருடனும் அன்பாகவும் சிரித்தமுகத்துடனும் பேசிப்பழகுவதில் சமர்த்தராக இருந்தவர். குருபக்தி மிக்கவர். துவஜாரோகணம் செய்ய முதல் எனக்கு உபசாரங்கள் செய்து குரு ஆசி பெற்றபின் தான் துவஜாரோகணத்தை நடாத்துவார். அவரது தர்மபத்தினி வீட்டுக்கு வரும் எல்லோரையும் அன்புடன் வரவேற்று மகிழ்வதில் சந்தோசமடைபவர். அப்படிப்பட்ட சிறந்த தர்மபத்தினியையும் ஆசையோடு வளர்த்த தன் மகளையும் விட்டுப்பிரிய ஏன் மனம் கொண்டாரோ தெரியவில்லை. எல்லாம் துர்க்கையம்பாள் திருவருள். தன் திருவடிக் கமலத்தில் பேரின்ப பெருவாழ்வு வாழ அவரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டார் போலும். அவர் தம் குடும்பத்தினருக்கு ஆறுதலை அருள அன்னை துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
அதிபர்,
தர்மசாஸ்தா குருகுலம்,
இணுவில்.

உ

ஸ்ரீ துர்க்காதேவி சரணம்

அஞ்சலி உரை

முதல் : ரகு

1960களில் ஆரம்பம் எங்கள் வீட்டின் நேரெதில் வீடு. ஸ்ரீ. ஸ்ரீமதி வாஞ்சிநாத ஐயர் தம்பதியின் 4வது புதல்வராகப் பிறந்து எனது தாயார், சகோதரிகளின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து உரிய வயதில் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை. யூனியன் கல்லூரியில் பயின்று உரிய வயதில் உபநயனம் (பூணூல்) செய்யப்பட்டார்.

நடு : அகிலன் சர்மா

1970ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் உதவி அர்ச்சகராக இணைந்தார். தன்னுடைய பணியில் மிகுந்த ஆர்வத்துடன் பணிபுரிந்து அனைவரையும் மகிழ்வித்தார். தெய்வத்திரு தங்கம்மா அம்மையாரின் நேரடிக்கண்காணிப்பில் பல நல்ல விடயங்களைக் கற்றுக்கொண்டார்.

உ–ம் : புராணபடனங்களில் அம்மா போன்றே இனிமையான தோடி இராகத்தில் புராணம் வாசிப்பதில் சிறப்புப் பெற்று உரிய வயதில் சௌபாக்கியவதி சுகல்யாவை திருமணம் செய்து இல்லற தர்மத்தையும் பேணி நடந்தார்.

1983ம் ஆண்டில் ஸ்ரீ துர்க்கா வேதாகம பாடசாலையில் பயின்று தேர்ச்சி பெற்றார். ஸ்ரீ துர்க்காதேவி மஹோற்சவ சப்பர விழாவில் தீபாராதனையின் போது தெய்வத்திரு நாதஸ்வர கலாநிதி அளவெட்டி பத்மநாதனின் பாராட்டைப் பெற்றார்.

இறுதி : அகிலேஸ்வரக் குருக்கள்

ஸ்ரீ துர்க்காதேவி திருக்கோவிலில் அவருக்கு ஆச்சாரிய அபிஷேகம் மாவை அமரர் வைத்தியநாத குருவாலும் மற்றும் பல சிவாச்சார்யர்கள் ஆசியுடனும் நடைபெற்றது. திருக்கோயில் உதவி அர்ச்சகர், உதவிக்குரு, மஹோற்சவ குரு, பிரதிஷ்டா குரு, தேவஸ்தான பிரதம குருவாக படிப்படியாக வளர்ந்தார். தெற்கு, வடக்கு கோபுரங்கள், மஹாமேரு ஸ்ரீசக்கர பிரதிட்டை என்பவற்றுடன் கடந்த 04.02.2018 ஞாயிறு மணவாளக்கோல விழாவினையும் 05–02–2018 திங்கள் மேலை (மேற்கு) கோபுர நிலையமெடுக்கும் விழாவிலும் முடியாத உடல்நிலையிலும் உற்சாகமாகக் கலந்து கொண்டார். என்னே விதியின் கொடுமை. 07.02.2018 புதன் காலைப் பூசையுடன் அவருடைய அம்பாள் பணி முடிவடைந்தது. அன்று மதியம் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கை சாதன உதவியுடன் அனுமதிக்கப்பட்டு 10.02.2018 தேவி திருவடிகளைச் சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ துர்க்கா சரணங்களைப் பிரார்த்திப்போமாக.

"முந்திய முதல், நடு, இறுதியுமானாய்"

ஓம் சாந்தி

வேதாகம வித்தியா பூஷணம்

பிரம்மஸ்ரீ. விஸ்வ. நாராயண சர்மா

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் பிரார்த்தனை உரை

தெய்வப்பிறவியின் தெய்வீகம் ஓய்ந்துவிட்டது. அன்பு, பண்பு, ஆளுமையும் நிறைந்த எங்கள் தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள் ஐயாவின் பிரிவு எம்மை வருத்துகிறது. யாம் என் செய்வோம்?

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

என்ற, வள்ளுவர் வாக்கிற்கமைய அனைத்துப் பெருமையும் மிக்க தூணாக நின்ற உத்தம சிவாச்சாரியரை சைவ உலகம் இழந்து தவிக்கிறது.

சுமார் 40 ஆண்டுகளாக எமது ஆலய வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்ட இப்பிறவியை வார்த்தைகளால் எழுதி முடிக்க இயலாது. சிவத்தமிழ் செல்வி அன்னையின் ஆற்றுப்படுத்தலில் அர்ச்சகராக, அந்தண சிரேஷ்டராக அரிய பணி செய்தவர். அம்பாள் மீது அதீத விசுவாசமுடைய பூசகராக விளங்கியவர். ஆலயத் திருப்பணி வேலைகளை ஊக்குவிப்பதில் அவருக்கு நிகர் அவரே. திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கும் போதெல்லாம் தனது அன்பளிப்பை முதலில் வழங்கி ஆசீர்வதிப்பவர். அவரின் குருத்துவத்தில் 2011ம் ஆண்டு மிகப்பெரிய கும்பாபிஷேகம் நடைபெற்றமை மறக்கமுடியாது. தென்திசைக்கோபுரம், வடதிசைக் குபேரவாசல் இரண்டினது கும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றிவிட்டு விடைபெற்றுவிட்டார். மேல்திசைக்கோபுரம் கட்டவேண்டுமென்று தானே முன்வந்து, நிலையமெடுத்து, நிலையக்கல்நாட்டி விடைபெற்றமை அதிசயமாக உள்ளது.

ஆலயத்தில் நடைபெறும் புராணபடிப்பை அக்கறையோடு ஆரம்பிப்பது முதல் தேவார திருவாசகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில் என்றும் ஆர்வமாக இருந்தார். எவரையும் இன்முகத்தோடு உபசரிப்பதில் குருக்கள் ஐயாவும் அம்மாவும் உன்னதமானவர்கள்.

எல்லாம் நினைத்தால் வேதனையாக உள்ளது. "எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்" என்ற யோகர் சுவாமிகளின் வார்த்தையைச் சொல்லி அமைதியடைய முடியவில்லை. அகம் அழுகிறது. கோவிலில் எத்திசையில் திரும்பினாலும் குருக்களின் நினைப்பே வருகின்றது. அவரது கணீரென்ற மந்திர ஓசை இல்லாத சூழல் வருத்துகிறது. எம் தவக்குறைவு ஒரு தயவான தத்துவனை இழந்தமை.

எம்மால் மறக்கமுடியாத மகத்தான அகிலன் ஐயா அம்பாளின் திருவடியில் நித்தியம் இருந்து எம்மை ஆசீர்வதிக்கப் பிரார்த்திப்போம். குருக்கள் ஐயாவின் குடும்பம் என்றும் சிறக்கப் பிரார்த்திப்போம். அம்பாளின் அருளால் குருக்கள் ஐயாவின் விருப்பம்போல் திருப்பணிகளைத் தொடர்வோம். கோவில் கடமைகள் குறைவின்றித் தொடர குருக்கள் ஐயாவின் ஆசியை வேண்டிப் பிரார்த்திப்போம். எமது தேவஸ்தான வரலாற்றில் குருக்கள் ஐயாவின் உன்னத வரலாறு என்றும் நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. பெருமையோடு வாழ்ந்து பெருமையோடு இம்மண்ணில் விடை பெற்ற இப்பெருந்தகையை மீளநினைந்து வழிபட்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெற வேண்டி அமைகிறேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

இதய அஞ்சலி

அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர்
உயர்திரு கந்தையா நீலகண்டன் அவர்கள்

சொல்லாலும் செயலாலும்
சேர்விலா பணி செய்தீர்....
ஏழை பங்காளனாக
என்றும் துணை நின்றீர்...
இந்துக்களுக்கு இடையூறு என்றால்
இனி இடித்துரைக்க யாருளர்
என் செய்வோம் எம் விதி
ஏற்றமிகு தலைவன் இனி இல்லை.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது ஆறுமுக நாவலர் வாக்கு. முத்தி என்பது இறைவனின் திருவடிகளில் என்றும் பேரின்பத்தில் திளைத்து இருத்தல் என சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. முத்திபெற எமக்கு யார் துணைபுரிவர் என்று ஆராய்ந்து பார்த்தால், சிவனுடைய சக்தியே என தெளிவாகிறது. சக்தி இல்லையேல் ஆன்மாக்களுக்கு முத்தி இல்லை.

உலக இயக்கத்திற்கு சக்தியே காரணம் என்பதை விளக்கும் வகையில் "சக்தி இருந்தால் செய். இல்லையேல் சிவனே என்று சும்மா இரு" என்று சொல்லும் பழமொழி வழக்கத்தில் உண்டு. சாதாரண உலகியல் வாழ்க்கையிலே தாய் தான் குழந்தைக்கு தந்தையைக் காட்டுகிறாள். இது ஆன்மீகத்திற்கும் கனகச்சிதமாகப் பொருந்துகிறது. குழந்தைகள் செய்கின்ற குற்றங்களை மன்னித்து, வழிகாட்டி அன்புகாட்டி அரவணைப்பவள் தாய். ஆன்மாக்கள் செய்யும் பாவங்களை மன்னித்து, இறைவனை சேரத் துணைபுரிபவள் சக்தியே.

உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த திருவருட் பயன் என்ற நூலில் முதலாம் அதிகாரத்தில் 2ம் பாடல்

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

எமது தலைவனாகிய சிவபெருமான் தனது பிறப்பற்ற ஒப்பற்ற பெருநிலையை, எல்லா உயிர்களும் பெறவேண்டும் என்ற அளவிறந்த கருணையின் காரணமாக, தமது அருளாகிய பராசக்தியுடன், பேதமின்றி ஒன்றி நிற்கிறான் என்பது இப்பாடலின் பொருள். அதாவது, அருவமும், உருவமும் இல்லாத இறைவன் தன்னில் பிரிவு இல்லாத அருளாகிய சக்தியால் ஐந்தொழில் நிகழ்த்தி, மன்னுயிர்கட்கு அருள்புரிதலை விளக்குகிறது.

மெய்கண்டார் அருளிச்செய்த சிவஞானபோதம் என்ற நூலின் 2ம் சூத்திரம்

அவையே தானே ஆய், இரு வினையிற்
போக்குவரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

இங்கு ஆணை என்பது சக்தியைக் குறிக்கும். ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் என்பதற்குப் பொருள் இறைவன் தனது சக்தியினின்றும் பிரிப்பின்றி நிற்பான். இறைவன் உலகத்தோடு அத்துவிதமாய் இயைந்து நிற்றலும், இயைந்து நின்று

உயிர்களுக்கு இருவினைகளைக் கூட்டுவித்தலும், அவ்வினைகளுக்கு ஏற்ப ஆன்மாக்களை போக்குவரவு புரிவித்தலும் ஆகிய எல்லாச் செயல்களும் நடைபெறுவது அவனது சக்தியால் என்பதை இச் சூத்திரம் விளக்குகிறது.

சக்தி என்பது குணமும், இறைவன் என்பது குணியும் ஆதலால் இறைவனுக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தம் தாதான்மிய சம்பந்தம் எனப்படுகிறது. பொருள் ஒன்றாயும், செயற்பாட்டில் இரண்டாயும் இருத்தலே தாதான்மியம் எனப்படுகிறது. இதனை ஒரு எடுத்துக்காட்டு மூலமாக விளக்கலாம்.

சூரியனுக்கு இருநிலைகள் உண்டு. ஒன்று தானேயாய் நிற்கும் நிலை. அந்நிலையில் தன்னைத்தானே விளக்கிக் காட்டி கதிரவன், சூரியன், ஞாயிறு என்று பல பெயர்களை பெறுகிறது. இரண்டாவது நிலை உலகத்தோடு இயைந்து, உலகப் பொருள்களை விளக்கி நிற்பது. அந்நிலையில் ஒளி, கதிர், வெயில் எனப் பெயர் பெறுகிறது. இவ்வாறு தன்னிலையில் நிற்கும்போது, சூரியன் என்றும், உலகத்தோடு இயைந்து, உலகப் பொருள்களை விளக்கிக்காட்டும் போது ஒளி என்றும் இரு திறப்பட்டு நிற்றலைக் காணலாம்.

இறைவனும் சக்தியும் பொருளால் ஒன்றாயும், செயற்பாட்டால் இருதிறப்பட்டும் நிற்பர். இறைவன் தானேயாய் தன்னையே தான் விளக்கி நிற்கும் நிலை சிவம் எனப்படுகின்றது. ஆன்மாக்களோடும் பாசப் பொருட்களோடும் இயைந்து அவற்றைச் செயற்படுத்துகின்ற நிலை சக்தி எனப்படுகிறது. சிவமும் சக்தியும் பொருளால் ஒன்றாய், தன்மையால் / செயற்பாட்டால் இரண்டாய் ஒன்றையின்றி மற்றொன்று இல்லாத நிலையினை மேற்படி சூத்திரம் விளக்குகின்றது.

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரால் எழுதப்பட்ட திருக்களிற்றுப் படியார் என்ற நூலில் உள்ள 43ம் பாடல்

அநாதி சிவனுடைமையால் எவையும் ஆங்கே
அநாதி எனப்பெற்ற அணுவை -- அநாதியே
ஆர்த்த துயரகல அம்பிகையோடு எவ்விடத்தும்
காத்தல் அவன் கடனே காண்.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் என்றும் உள்ளவை. அநாதி காலம் தொட்டே உலகம் சிவனுக்கு உடைமையாயும், உயிர்கள் சிவனுக்கு அடிமையாகவும் உள்ளன. அநாதி காலம் தொட்டே உயிர்களை பிணித்து நிற்கும் பாசங்களை, கேவலம், சகலம், சுத்தம் ஆகிய 3 நிலைகளிலும், திருவருட்சக்தியோடு கூடிநின்று, அகற்றுதல் சிவனின் கடமையாகும் என்பது இப்பாடலின் பொருள்.

உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவப்பிரகாசம் என்ற நூலில் 14வது பாடல், பதியின் தடத்த லக்கணம் பற்றிக்கூறுகிறது.

நீடுபரா சத்திநிகழ் இச்சா ஞானம்
நிறைகிரியை தரஅதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு உருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்து வாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரண புவன போகம்
பீடுபெற நிறுவிஅவை ஒடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே.

நிலைபெற்ற மேலான பராசக்தி தனது வியாபகத்தால், இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் சக்திகளைத் தர, அந்தச் சக்திகளை நின்மலனாகிய சிவன் பொருந்தி, நாதம், விந்து முதலிய தத்துவங்கள் தோற்றுகின்ற சுத்த மாயையைப் பொருந்தி, வேதம், ஆகமம் முதலிய பல கலைகளை அருளிச்செய்து, அனந்ததேவரை அனுட்டித்து, பிரகிருதி மாயையிற் தனு, கரண, புவன, போகங்களையும், சீகண்டரை அனுட்டித்து, பிரகிருதி மாயையிற் தனு, கரண, புவன போகங்களையும் படைத்து நிறுத்தி ஒடுக்குவான் என்பதே இப்பாடலின் பொருள். இவ்வாறு ஆன்மாக்களின் பாசங்களை அகற்றி பிறவித் துன்பத்தை ஒழித்து, சிவனை அடைய உறுதுணையாய் நிற்பவள் சக்தியே.

திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருவுந்தியார் என்ற நூலில் 21வது பாடல்

சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்(கு)
அல்லனாய் ஆளானென் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற.

சொல்லினால் அளவுபடுத்திச் சொல்லத்தக்க வடிவம் முதலியனவாய் உள்ள பொருள்களும், சொல்லால் உரைக்கப்படாத, இல்லாத பொருள்களும், ஆகிய இவ்விருவகை பொருள்களும் அல்லாதவனுமாய், மனம், வாக்கைக் கடந்து நின்ற பதி ஞானத்தால் உணரத்தக்க, அருட்சக்தியான அம்பிகைக்கு நாயகனாகிய தலைவன் என்பது பொருள்.

அருணந்தி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவஞானசித்தியாரில் பல பாடல்கள் சக்தியின் தன்மை பற்றி விளக்குகின்றன. அவற்றுள் சில

சக்தியுஞ் சிவமு மாய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி
வைத்தனன் அவனால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார். 1–69

இறைவன் இவ்வாறு சக்தியுஞ் சிவமுமெனத் தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் வைத்தலானன்றே, பல்வேறு வகைப்பட்ட உயிர் வடிவங்களனைத்துங் குறியானுங் குணத்தாலும் ஆண்பெண்ணென அவ்வவி யோனிக்குள் இருவேறு வகையாயடங்கித் தம்முட் கூடிக்களித்து வாழமுடிகிறது.

சக்தியாய் விந்து சக்தி யாய்மனோன் மனிதா னாகி
ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி
வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சக்தி யொருத்தி யாகும்
எத்திற நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள். 2–75

சத்திபேதம், முறையே சக்திமுதல் வாணியீறாக ஏழு வகைப்படும். எம்மிறைவனாகிய பரமசிவன் சிவபேதம் ஏழினும் நின்று நடாத்துமாறெல்லாம் அவனோடு தாதான்மியமாய் நிற்கும் பராசக்தியும் இச்சத்திபேதம் ஏழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும்.

சக்திதான் நாத மாதி தானாகுங் சிவமு மந்தச்
சத்திதா னாதி யாகும் தரும்வடி வானவெல்லாம்
சத்தியும் சிவமு மாகும் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாமாங் சத்திதானே. 2–76

இறைவனும் சக்தியும் தாதான்மியமாய் நிற்றலை விளக்கிக் கூறுகிறது இப்பாடல் சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் இயற்றிய உண்மைநெறி விளக்கம் என்ற நூலின் 3ம் பாடல் சக்தியின் தன்மை பற்றி விபரிக்கின்றது.

எவ்வடி வகளும் தானாம் எழிற்பரை வடிவ தாகிக்
கவ்விய மலத்தான் மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வமீண் டலகப் பண்ணிப் பாரிப்பான் ஒருவ னென்றே
செவ்வையே உயிருட் காண்டல் சிவரூப மாகு மன்றே

அனைத்து உயிர்களிடத்தும் இறைவன் உயிர்க்கு உயிராய் விளங்கி நின்று, அவ்வுயிர்களை உய்விப்பதற்காக, தன்னுடைய திருவருளையே எழிற்பரை வடிவமாக்குகிறான். இறைவனது அருளே சக்தியாகும். இச்சக்தியே பாசங்களால்

பீடிக்கப்பட்ட உயிர்களுக்கு தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து, அவற்றால் பிறப்பு, இறப்பு முதலியவற்றுக்கு ஆளாக்கி, அச்செயல்களின் வழி பக்குவப்பட, உயிர்களுக்கு பிறவா நிலையை அளித்து, இறைவனிடம் சேர்க்கிறது.

மனவாசகங்கடந்தார் அருளிச்செய்த உண்மை விளக்கம் என்ற நூலின் 38வது பாடல்

பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரைஉணர்வுக் கெட்டா ஒருவன் – வரைமகள்தான்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு.

பராசக்தியாகிய திருவம்பலமிடமாக நின்று, வரைமகள்தான் காணும்படியே பாதியாகிய மலையரையன் மகள் காணும்படிக்கு, ஆடல் பேணுமவர்க்குப்பிறப்பு உண்டோ?திருக்கூத்தை விரும்பினவர்களுக்குப் பின்பு பிறவியில்லையாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகத்தில் பல இடங்களில் சக்தியின் தன்மை பற்றிக் கூறப்பட்டுள்ளது. மார்கழி மாதத்தில் அதிகாலையில் பாடப்படும் திருவெம்பாவையே சக்தியை வியந்து பாடியது.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை"
"நந்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான்"
"உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்ற திருவெம்பாவை வரிகள் சக்தியின் தன்மையை விளக்கி நிற்கின்றன.

மேலும் அச்சோ பதிகத்தில் இறுதிப்பாடல்

"செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே."

செம்மையான நல்வழி அறியாத, அறிவிலிகளோடு கூடித்திரிந்த என்னை, மும்மலங்களும் நீங்கும்படி செய்து, நாயேனை சிவிகையில் ஏற்றி, முதல்வனான சிவபெருமானை அறியும்படி, அம்மை எனக்கு அருளிய பேற்றை பெற வல்லவர் யார் என்கிறார் மணிவாசகர். சக்தியின் திருவருளை வியந்து போற்றிய பாடல் இது.

நல்வினை தீவினை ஆகிய இரண்டு வினைகளையும் பற்றற்ற வினையில் அனுபவித்து நான், எனது என்ற நிலைகளைக் கடந்து, எல்லாம் அவன் செயல் என்ற

உணர்வோடு காரியங்களைச் செய்ய, இருவினை ஒப்பு ஏற்பட்டு, மலபரிபாகம் நிகழ்ந்து, திருவருட்சக்தி ஆன்மாவில் பதிய சக்திநிபாதம் நிகழும். இதுவே இறைவனின் திருவடியில் ஆன்மா என்றும் பேரின்பம் அனுபவிக்கும் நிலை. இவ்வண்ணமாகத்தான் சக்தி உயிர்களை சிவத்தோடு சேரச் செய்கிறது என்கிறது சைவசித்தாந்தம்.

திருமுறை நெறிச்செல்வர், சித்தாந்த ரத்தினம்,
சிவஞானச்சுடர் கோசினி கோணேஸ்வரன்

உசாத்துணை நூல்கள் :

1. சிவஞானபோதம் வழித்துணை விளக்கம்
2. சிவப்பிரகாசம் திருவிளக்கம் உரை
3. உண்மை விளக்கம் சுந்தரமூர்த்தி உரை
4. திருவுந்தியார் சிவப்பிரகாசர் உரை
5. திருக்களிற்றுப்படியார் வெள்ளை வாரணம் உரை
6. திருவருட்பயன் சுந்தரமூர்த்தி உரை
7. உண்மைநெறி விளக்கம் தெளிவுரை
8. http://www.thevaaram.org

விழிக்கே அருள் உண்டு, அபிராம வல்லிக்கு, வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு, அவ்வழி கிடக்க,
பழிக்கே சுழன்று, வெம் பாவங்களே செய்து, பாழ் நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு, என்ன கூட்டு இனியே?

பொருள் :

அபிராமியின் விழிகளில் என்றும் அருளுண்டு. வேதமுறைப்படி அவளை வழிபட எனக்கு நெஞ்சமும் உண்டு. ஆகையால் பழியையும், பாவத்தையுமே விளைவித்து, பாழ் நரகக் குழியில் அழுந்தி வாடும் பேதையர்களோடு எனக்கு இனி என்ன தொடர்பு? (அபிராமி அன்னை சிறந்த துணையாவாள்).

- அபிராமி அந்தாதி (79)

ஸ்ரீ துர்க்காதேவியின் வடதிசை (குபேர) வாசல் கோபுர கும்பாபிஷேக நிகழ்வுகள் - 28-01-2018

28.1.2018

28.1.2018

29.03.2018

முத்துக்குமார கவிராயர்
(1780 –– 1852)

சுன்னாகத்தின் பெருமை

யாழ்ப்பாணத்துப் பழைய செந்தமிழ்ப் பண்ணைகளுள் சுன்னாகமும் ஒன்று. அங்கே செம்பாட்டு நிலப் பண்பும் மிகுதியாகவுண்டு. சுன்னாகத்திலுள்ள பெரிய நாளங்காடி என்னும பெருஞ்சந்தை குடாநாட்டிற்கே மதிப்புக் கொடுப்பதாகும். அதன் பெருமை போர்த்துக்கேயராய பறங்கியரையும் தலை சாய்க்கச் செய்தது. போர்த்துக்கேயரை அடுத்து வந்த ஒல்லாந்தர் காலத்திலே 1665ஆம் ஆண்டளவிலேயே காசியிலிருந்து வந்த அரங்கநாத ஐயர் மகன் வரதபாண்டியர் என்பார் சுன்னாகத்தில் செந்தமிழ் வளர்த்தமையோடு, சைவ சமயத்தையும் நிலைபெறச் செய்துள்ளார்.

"ஐயமின் முந்நூற் றையிரு விருத்தம்
செய்ய செந்தமிழாற் றெரிந்துரை செய்தனன்
கங்கைமா நதிசூழ் காசிமா நகரமும்
பங்கமில் பங்கையப் பைந்துணர் மாலையும்
ஆதி நான்மறை சேரந்தண ராணையும்
கோதக லோமதிக் கொடியு மிங்குடையோன்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்கும்
துன்னிய வளவயற் சுன்னை நன்னாடன்"

பெருங்காயமிட்ட பாண்டத்தில், பெருங்காயம் சமைந்த பின்பும் அதன் வாசனை நிலவுமாப் போல் எங்கள் முந்தையேர் கொண்டிருந்த தமிழ்ப் பற்று, அவர்கள் மறைந்த பின்பும் மரபுவழி தவறாமல் நாட்டில் முகிழ்த்து நிலவி வந்துள்ளமைக்கு யாழ்ப்பாணத்து ஊர்கள் தோறும் உண்டாய செந்தமிழ்ப் பண்ணைகளே சான்றாக இருந்து வந்துள்ளன.

சுன்னாகப் புலவர்கள் பரம்பரை

சுன்னாகம் என்றுமே புலவர்களின் பெருக்கத்தாற் பொலிவுபெற்று வந்துள்ளது. அங்கே மரபுவழிவந்த நற்றமிழ்ப் புலவர்கள் வரிசையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் பரம்பரை பரம்பரையாகப் புலமை பெற்றுயர்ந்து வந்துள்ளார்கள்.

நாகநாதபிள்ளை மைந்தன் சந்திரசேகரம்பிள்ளை. மைந்தன் சுப்பிரமணிய பிள்ளை, மைந்தன் அம்பலவாணபிள்ளை என்னும் நான்கு தலைமுறைகளுமே புலமை வாய்ந்த குடும்பத்தலைவராவர்.

அம்பலவாணபிள்ளை என்பாரின் மைந்தர்கள் இருவர். மூத்தவர் முத்துக்குமாரர், இளையவர் சின்னதம்பிப்பிள்ளை. இருவருமே இளமை முதற் புலமை பெற்றுப் புகழீட்டியவர்களாவர். மூத்தவராய முத்துக்குமாரரின் இளமைப் புலமை அவருக்குக் கவிராயர் என்னும் பட்டத்தையும் ஈட்டிக் கொடுப்பதாயிற்று.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் காட்டிய இலக்கிய வழியிலே நாம் சந்திக்கின்ற இரு கவிராயர்களுள் ஒருவர் முத்துக்குமார கவிராயராவர். அவர் தம் கவித்துவத்துக்கு ஏற்றம் கொடுத்தவர்கள் அவரைக் "கவிராசசேகரம்" என்றே வழங்கியுள்ளார்கள்.

கவிராயரின் அருமைத் தம்பியாராய சின்னதம்பிப்பிள்ளை என்பாரின் மைந்தருள் ஒருவரின் பெயரும் அம்பலவாணபிள்ளை என்பதாகும். இவரைச் சிதம்பரம் அம்பலவாணபிள்ளை எனவும் வழங்குவர். சிதம்பரம் அம்பலவாணபிள்ளையின் அருமை மைந்தரே சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர். இவரை இலக்கியவழி இரண்டு மனிதர்களுள் ஒருவராகச் சுவைத்துக் காண்பிக்கின்றது.

இங்ஙனமாகத் தம்முடைய முற்சந்ததியினரும் பிற்சந்ததியினரும் செந்தமிழ் வளர்த்த செம்மல்களாயிருக்கும் பாக்கியம் பெற்றுத் தாமே பெருமளவில் செந்தமிழ் வளர்த்த செம்மலாயிருந்தவர் முத்துக்குமார கவிராயராவர்.

முத்துக்குமார கவிராயர் அம்பலவாணர் என்னும் புலவரின் மைந்தராய் 1780ஆம் ஆண்டில் தோன்றியவர். இவர் ஒல்லாந்தர் ஆட்சியையும் ஆங்கிலேயர் ஆட்சியையும் கண்ட அனுபவசாலி. இவர் இளமையிலேயே தம்மிட்டம் போலக் கவிபாடும் திறமை பெற்றிருந்தாரெனவே, எல்லோரும் இவரைக் கவிராயர் எனவே அழைப்பாராயினர்.

மாணாக்கர்களாற் பெற்ற பெருமை.

கவிராயருடைய புலமையை அறிந்தவர்கள் பலர். தங்கள் புதல்வர்களை இவரிடம் படிக்க வைத்தனர். சிறுவர்களை மனிதராக்கிய பெருமை கவிராயருக்குண்டு. கவிராயரின் புலமைப்பைத்தியம் பலரிடம் தொற்றியமையால் ஊரிற் பல இளைஞர்கள் புலவர்களாக மலர்ந்திருந்தனர்.

சிறுப்பிட்டி வைரவநாதர் என்னும் பெரியார் ஏழாலையில் திருமணஞ் செய்தவர். அவரின் மைந்தர்களில் ஒருவராய தாமோதரம்பிள்ளை அவர்கள், கவிராயரின் உத்தம மாணாக்கனாகி, பன்னிரண்டாம் வயதுக்குள்ளேயே பண்டிதர்க்கான இலக்கிய இலக்கண அறிவைப் பெற்றுக் கொண்டார். தாமோதரம்பிள்ளை அவர்கள் தாம் பிற்காலத்தில் எழுதிய நூல்களுக்கும், பதித்த

நூல்களுக்கும் முகவுரைகள் எழுதியபோது குரு வணக்கமாகக் கவிராயரைப் போற்றிய பாடல்கள் இலக்கியச் சுவையோடு குருவி சுவாசப் பண்பாட்டையும் காட்டுவன. செந்தமிழ் வளர்த்த செம்மலாய கவிராயரின் புகழைச் சீடராய பிள்ளையவர்கள் பாடிய பாடல்களிலொன்று இது.

"எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தினோன் சுன்னா
கத்துயர் மரபினோன் முத்துக் குமார
வித்தக னடிதலை வைத்து வாழ்த்துவனே"

செந்தமிழ் வளர்த்த செம்மலாய தாமோதரம்பிள்ளை அவர்கள் தாம் அரிதின் முயன்று நூறாண்டுகளுக்கு முன் பதிப்பித்த கலித்தொகைப் பதிப்பிலும் தம்மாசிரியருக்கு வணக்கஞ் செலுத்தத் தவறவில்லை.

"சுன்னை முத்துக் குமாரன் றுணைக்கழல்
சென்னி நாவொடு சிந்தை திருந்தவைத்
தன்ன மூதறிவாளர் பதந்துதித்
திந்நி லத்தின் வுரையின் றியம்புகேன்"

இவ்வாறே பிள்ளை அவர்கள் தாம் பதிப்பித்த இலக்கண விளக்கப் பதிப்பிலும் தம்மை உருவாக்கிய செம்மலாய கவிராயர் அவர்களைச் சிந்தையிலிருத்திப் போற்றியிருக்கிறார்.

"திங்கள் தங்கிய செஞ்சடை முடியினன் திருத்தாள்
பங்க யங்கயி லாயநாத தனைமுனிப் பழிச்சிச்
சங்க மங்களத் தமிழ்முத்துக் குமாரன் தன்மலர்ப்பா
தங்கள் வங்கமாத் தமிழ்க்கடல் இடைபடி குவனே"

தமிழ், கடலிலும் பெரியது, பரந்தது. இதனைக் கடந்து கரை காண்பதற்கு ஓடம் போலுதவுவது தம் குருவாய கவிராயரது மலர்ப்பாதம் என்பர். குரு பாதம் துணையென்று இந்து நாகரிகப் பண்பாட்டில் நிலவும் பண்டைய தூய மரபுமாகும்.

விநாயக வணக்கம்

முத்துக்குமார கவிராயர் சுன்னாகத்துச் சந்திரசேகர விநாயகப் பெருமானை மெய்யன்போடு உருகி வழிபடும் நியமம் பூண்டவர் என்பது, அவர் அப் பெருமான் மீது பாடிய தனிக் கவிகளால் அறியற்பாலது. அவர் வணக்கமாகவும் முறையீடாகவும் சில பாடல்கள் பாடியுள்ளார். வணக்கமாகப் பாடிய பாடல்களுள் ஒன்று "ஒரு கோட்டானை நாளும் வணங்குவனே" என வருவதாகும். இதில் விநாயகப் பெருமானின் பரத்துவம் பாடி, அவர் தம் கவிதையைக் கேட்டருள் புரிந்தவர் எனப் பாடுவர். அவர் முருகப்

பெருமானுக்குத் திருமணஞ் செய்து வைத்தவர். வெள்ளை இடபமேறிய பெருமான் மைந்தர் என்றெல்லாம் பாடுவர்.

"வாட்டானை யன்னமை தீட்டா விழிமிளிர் மான்மகளைத்
தாட்டானை யானுக்கு வேட்டானை யன்பர்தஞ் சஞ்சலங்கள்
மீட்டானை யென்கவி கேட்டானைச் சுன்னையின் மேவுநரை
மாட்டா னருளொரு கோட்டானை நாளும் வணங்குவனே"

தமக்கருள் புரிந்த பெருமானைச் சுன்னாக நண்பனே என்றும் கலைஞான தற்பரா எனறும் வழங்குபவர், கால் மேலான பர மூல காரணமான கணபதீ, கருணாநிதீ எனச் சரணடைவர்.

இங்ஙனம் சரணடைந்த அவர் தம் காலத்து ஆங்கிலேயர் அத்துமீறி அரசபணி என்னும் சேவையில், குடிமக்கள் கட்டாயமாகத் தெருக்கட்டும் வேலையில் ஈடுபடுதல் வேண்டும் என்று பறையறைந்து மக்களை நலியச் செய்தார்கள். இதனைப் பொறாத கவிராயர் விநாயகப் பெருமானிடமே முறையிட்டு வருந்தியுமுள்ளார்.

"மருக்கட்டுமாலை முடிமன்னர்
கட்டளை வந்தபடி
தெருக்கட் டட்டாம்கள் மலைப்பாரை
ஒப்பனை செய்தடித்து
நருக்கட்டு மாமழுத் தாற்குற்ற
மாக்கினை நம்பிக்கை யென்(று)
இருக்கட்டு மாமிதற் கென்செய்கு
வேன்சுன்னை ஏரம்பனே"

சிதம்பர நடராசர் தோத்திரம்

யாழ்ப்பாணத்தாருக்குத் தில்லை என்னும் சிதம்பரம் அடுத்த ஊர் போலமைந்திருந்த தலமாகும். ஆண்டுதோறும் சிதம்பரம் போய்வந்த அடியார்கள் யாழ்ப்பாணத்தவர் பலர் தம் நிலபுலங்களைச் சிதம்பரத்திற்குத் தருமசாதனம் செய்துமிருக்கிறார்கள். சிதம்பரத்தில் மடங்கள் கட்டியும் உள்ளார்கள். ஆறுமுகநாவலர் அவர்கள் சிதம்பரத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலை அமைத்து உயர் கல்விக்கான வழிவகைகளையும் செய்துள்ளார். அவரின் முன்னோரான ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் 1650ஆம் ஆண்டளவிலேயே சிதம்பரத்தில் திருக்குளமும் திருமடமும் தம் பெயர் நிலவுமாறு அமைத்தவராவர்.

முத்துக்குமார கவிராயர் சிதம்பர நடராசப் பெருமானின் குஞ்சிதபாதம் மறவாதவர். அவர் நடராசமூர்த்தமீது பக்திப் பெருக்கால் உந்தப் பெற்றுத் தோத்திர ரூபமாக வழியெதுகையும் மடக்கலங்காரமும் விரவி வருமாறு மூன்று ஆசிரிய

விருத்தங்கள் பாடியுள்ளார். அவை "சிதம்பர மெனுந்தவர் நிதம்பர விதம்பெறு சிதம்பர மகாதேவனே" என்னும் ஈற்றடிகளைக் கொண்டு முடிவனவாகும்.

"பாதநூ புரமணி கலின்கலின் கலீனென்று
பரதவித மாட வேங்கைப்
பட்டாடை மடமடென விட்டாட வரையினிற்
பன்னகக் கச்சை யாடச்
சோதிநூ லாடவுட னாதியேனக் கொம்பு
தொட்டாட விதிக பாலத்
தொடையாட முழுவென்பு புடையாட மான்கன்று
துள்ளிவிளை யாட மதியின்
பாதியா டக்குழையின் மீதுவொற் குண்டலம்
பளபளென் றாட வணியும்
பணியாட, வணியக்கு மணியாட மதலைப்
பசுந்தொடையு மாட வேணிச்
சீதவா னதியாட, மன்றாடு நின்பாத
தெரிசனம் எனக்க ருளுவாய்
சிதம்பர மெனுந்தவர் நிதம்பர விதம்பெறு
சிதம்பர மகாதே வனே!"

மாவிட்டபுரக் கந்தசுவாமியார்

கோவிற்கடவை என்றும் மாவை என்றும் வழங்கும் திருத்தலத்தில் கோயில் கொண்டருளியுள்ள சுப்பிரமணியப் பெருமானுக்குக் காவடிக் கந்தன் என்றும் திருநாமம் வழங்குவதுண்டு. அங்கே நடைபெறும் பெருந்திருவிழா நாள்களில் பக்தர்கள் பாற்காவடி கொண்டு ஆடிப்பாடி வரும் காட்சி பக்திப் பரவச மூட்டுவதாகும். அங்கே நடைபெற்ற திருவிழாவொன்றில் அடியார்கள் வேண்டிக் கொண்டபோது, கவிராயர் பாடிய தோத்திரப் பாடல்கள் அற்புதமானவை.

மாவிட்டபுரத்துக் காவடியாட்டங் கண்ட அடியவர்கள் இயமன் ஏறிவரும் எருமையைக் காணமாட்டார் என்று கருத்துப்படப் பாடிய பாடலில், எ என்பது ஏழு, ரு என்பது ஐந்து எனவே ஏழுஞ்சுமை எருமை என வருகிறது.

"கோவிற் கடவைக் குருபரனா ருற்சவத்தைச்
சேவித்து நிற்பார் தெருத்தோறும் – காவிச்செல்
காவடியைக் கண்டிருப்பார் காண்பரோ கூற்றுவனார்
தாவடி ஏழுஞ் சுமையைத் தான்"

இங்ஙனம் பாடியவர், தொடர்ந்து திருவிழாத் தரிசனப் பலன், திருவிழாச் சேவையின் சிறப்பு, சப்பர மஞ்சத் திருவிழாச் சிறப்பு என்பன சம்பந்தமாகவும் பாடியுள்ளார். இப்பாடல்களின் முதலடியை நண்பர் சேனாதிராய முதலியார்

உடன்நின்று எடுத்துப் பாட, ஏனைய அடிகளைக் கவிராயர் தொடர்ந்து பாடியமை இரட்டைப் புலவர்களின் சம்பந்த விசேடத்தைக் குறிப்பனவாகும்.

இவற்றுக்கு அப்பால் கவிராயர் மாவிட்டபுரத்துக் கடவுள் பவனி வந்த காட்சியைப் பாடியபோது, பாடிய ஆசிரிய விருத்தத்தில் அயலூர்களின் பெயரை இட்டுப்பாடி, அவற்றுள் வேறு பொருளை மறைத்து வைத்துமுள்ளார். இதை வடநூலார் நாமாந்திரிகை என்னும் பிரகேளிகை என்பர். இதனால் ஒரு பொருள் ஆழ்ந்து, மேலெழுந்த வாரியாக வேறொரு பொருள் மிதந்திருக்கக் காணலாம். இத்தகைய பாடல்கள் சிலவற்றைப் பண்டிதமணி அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற நான்காம் தமிழ் விழாவில் சேதுப்பிள்ளை அவர்களின் தலைமையில் தமிழ் என்னும் தலைப்பில் பேசி விருந்து செய்ததும் உண்டு.

அன்று கவிராயர் பாடிய பாடலில் மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை, துன்னாலை, சில்லாலை, கொடிகாமம் ஆகிய ஊர்ப் பெயர்களை வைத்துப் பாடிய பாடலில் மறைத்து வைக்கப் பெற்ற பொருள் உயர்த்துணர வேண்டியது.

"மல்லாக மாதகலான் மருகன் சுன்னாகத்தான்
மகன்பா வாணர்
சொல்லாச்சீர் ஈவினையான் துன்னாலை யானத்தான்
சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்
சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத் திடைப்பவனி
வரக்கண் டேனே"

இங்கே எழுந்தருளி வந்தவர் முருகன். அவர்மல் ஆகம்மாது அகலான் மருகன் அஃதாவது வலிய மார்பிலே ஸ்ரீதேவி அகலாதிருக்கும் திருமாலின் மருகன். சுன்னாகத்தான் என்பவர் வெள்ளியங் கிரியின் சிவன். சீர் ஈவினையான் என்றால் செல்வம் கொடுக்கும் செயலுடையவன். துன்னாலையானத்தான் என்பது மன்மதனுக்கு அத்தான். சில்லால் ஐ இருள் வென்ற என்பது தகட்டணியால் வியக்கப்படும் இருளையும் வென்ற என்பதாகும். குறக்கொடிகாமத்தான் என்பது குறவர் மடமகளாய வள்ளியம்மையார் மீது அளவு கடந்த அன்புடையவன் என்பதாகும்.

இனி முருகப் பெருமான் எழுந்தருளி உலாவரக் கண்ட மகளிர் கொண்ட காதலையும், செய்த செயல்களையும் இங்ஙனமாகவே மறைத்துப் பாடிய பாடல்கள் பலவாகும். அவற்றுள் ஒன்று கட்டளைக் கலிப்பாவாலமைந்து, இலக்கிய இரசிகர்கள்பல்லாயிரவர் நாவை அடிக்கடி அசைத்ததாகும்.

"முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்(து)
அடைய வோர்பெண் கொடிகாமத் தானசைத்(து)
ஆனைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்று பலாலிகண்
சார வந்தன ளோர்இள வாலையே"

இங்கே வந்த ஊர்ப்பெயர்கள் சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்பனவாகும்.

இங்கேயும் மறைத்து வைக்கப்பெற்ற பொருள் அருமை வாய்ந்த அகத்துறை சம்பந்தமானதொன்றாகும். சுன்னாகத்தான் திருக்கைலாசமலைச் சிவன்வழி என்பது மகனைக் குறிப்பது தாவடி கொக்கு என்பது தாவிப் பாய்கின்ற அடிகளையுடைய குதிரை. பெண்கொடி என்பது கொடி போன்ற பெண். காமத்தான் காதல் மிகுதியாயுள்ளவள். ஆனைக்கோட்டைக் கட்டு உடைவிட்டாள் என்பது அவள் காமவிச்சை காரணமாக யானைக் கொம்பனைய குத்து முலைகளைக் கட்டவிழ்த்து விட்டாள் என்பதாகும். உடுவிலான் என்பது நட்சத்திரங்களைத் தேவியாகவுடைய சந்திரன். உடு + இல்லான் என்பதாகும்.

இனி இத்தகைய சூழலைச் சாதகமாக்கிக் கொண்டு மன்மதன் வருகிறான். அவன் பன் ஆலையான் சொல்லப்படுகின்ற கருப்பு வில்லினையுடையவன். மல்லாகம் வலிய மார்பு, பலாலி பலவாய துளி, இளவாலை இளம் பருவத்தாளாய மடக்கொடி.

நல்லூர் முருகனைப் பாடிய நயம்

கவிராயர் சேனாதிராயரோடு நெருக்கமாகப் பழகிய நட்பில் நல்லூருக்கும் வருபவர். இருவரும் கோயிலுக்குச் சென்று வணங்கி நிற்கும்போது, கவிராயர் முதலியாரிடம் "எங்கே உங்கள் முருகனை நீங்களே பாடுங்கள்" என்பார். முதலியார் பாடிய பின், தாமும் பாடுதல் கவிராயர் வழக்கம். அன்று கார்த்திகைத் திருவிழா. கீரி மலையில் மடங்கட்டிய கிருஷ்ணபிள்ளை அவர்களின் முன்னோர் பரம்பரையாகச் செய்து வந்த பெருவிழா. கவிராயர் சுவாமி தரிசனஞ் செய்தபோது, நாயகி பாவனையில் நன்கமைந்த கட்டளைக் கலித்துறைப் பாடலும், இரட்டையாசிரிய விருத்தமும் பாடித் துதித்தார்.

கட்டளைக் கலித்துறை

"மங்கள நல்லை வடிவேலர் வீதிவந் தார்மடவார்
பங்கயங் காந்தள் குவளைவெண் முல்லை பரப்பிமறு
செங்கு நிறைகுடம் வைத்துமெய்த் தொண்டுசெய் தாரிதற்கோ
அங்க முழுதும் புனிதமி னார்க்கென் றறைந்ததுவே"

கவிராயர் நல்லூர்க் கார்த்திகைத் திருவிழாவன்று அடுத்துப் பாடிய இரட்டையாகிய விருத்தத்திலே மறைத்து வைத்துப் பாடியதும் நாமாந்திரிகையாகும். இது கடவுள் மாட்டு மானுட மகளிர் நயந்தபக்கமுமாம்.

"ஆரா தனைக்காந் திருநல்லூர்
ஆறு முகத்தார் மனைவியரோ(டு)
அடுப்பி லடுத்த நெருப்பிலன்பர்
அகத்தை உருக்கும் சாறுவைத்தார்
வாரா மறுகி னேராய்மென்
மடவா ரெடுத்தார் காற்பலச்சொன்
மரத்தைக் கோளி யாரெடுத்தார்
மருங்கின் மயலாய் நின்றேனே!
ஊரா ருரையும் வம்பலரே!
உற்றா ரினுவ்கோ வம்பலரே!
உலையை யீரும் வைவாளே!
உறுக்கி யனையும் வைவாளே!
வேரா வடம்பில் வரும்பீரே!
விரும்பி யென்பால் திரும்பீரே!
விளைவின் மதனுக் கத்தானே!
விரும்பு மென்னா கத்தானே!"

அடுப்படியில் சுவையாகச் சமைத்த சாறு என்பது வெளிப்படையான கருத்து. ஆனால் மறைத்துக் கூறிய பொருள் அடுப்பு–பரணி. பரணிக்கு அடுத்தது நெருப்பு – கார்த்திகை. சாறு என்பது திருவிழாவாகும்.

காதல் உண்டாய மகளிருக்கு அயலவர் கூறும் பழிச்சொல் அலர் அவளுக்குத் தென்றற் காற்று உயிரைப் போக்கும் வாள் போன்றதாகும். இனி அவளுடைய முலைகளில் பீர் என்னும் பசலை படருவதும் உண்டு. எதுவரினும் அவள் ஊரார் அலரைப் பசலையாக்கிக் காதலை வளர்ப்பாள். காதலன் வேறு யாருமில்லை. மன்மதனுக்கு அத்தான். அவளுக்கு நெஞ்சில் நிறைந்த கந்தன்.

நல்வாழ்வு வேண்டி நரசிக் மூர்த்தியைப் பாடியமை

மயிலணியிற் கோயில் கொண்ட நரசிங்க மூர்த்தியையும் கவிராயர் விட்டு வைக்கவில்லை. நமக்கு நல்வாழ்வு வேண்டும் என வேண்டுகோள் விடுத்துச் சில பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்றையாவது சுவைத்துப் பார்க்கலாம்.

"கல்லாத புல்லர் மனையனு காமற் கவியவர்மேற்
சொல்லாமல் நல்குர வில்லாமல் நித்தம் துயர்க்கடலுட்
செல்லாமல் நல்ல வரந்தரு வாய்செந் திருமருவு
நல்லாய்! மயிலணி வாசா! விசய நரசிங்கமே"

ஐயப்பனைப் போற்றியமை

தமிழ்நாட்டில் இன்று சபரிமலை ஐயப்பன் வழிபாடு உச்ச கட்டமடைந்து, காடு மேடு பள்ளத்தாக்கு எங்கும் "சுவாமியே ஐயப்பா சரணம்" என்னும் மந்திரவொலி ஆவேசக் குரலில் ஒலிக்கிறது. பக்தர்கள் கூட்டங் கூட்டமாக ஆடிப்பாடி அரோகரா குரலெழுப்பிப் போகும் காட்சி பக்திப் பரவசத்தைத் தூண்டுமாறு படருகிறது.

இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே முத்துக்குமார கவிராய சேகரர் சுன்னாகத்து ஐயனார் மீது ஊஞ்சற் பாட்டுப் பாடி வாழ்த்திய அருமை பெரிது. அவர் ஐயனார் தத்துவத்தையும் விளக்கி அவரருளை நாடி வேண்டி, ஊஞ்சரேற்றிப் பாடி ஆட்டுகிறார். நாமும் பக்தி மேலிட்டுத் தமிழ்த் தேனருந்தி அசைகின்றோம்.

சுன்னாகத் தனிலுறைவோம் என்று வந்த சுத்த மகா சாத்தன் என்றும், அத்திமுகன் சகோதரன் என்றும், அதிக கிருபாகரன் என்றும், ஆரணத்தின் உட்பொருள் என்றும், பூரண புட்கலை தேவியர் தலைவரென்றும், திருக்கையில் செண்டு ஏந்தியவர் என்றும் அருட்கடல் என்றும் போற்றி; வஞ்சனை நோய் வறுமை, பிறவித் துன்பம் நீக்கி, அஞ்சல் அஞ்சல் என அருளுமாறு வேண்டுவர். இத்தகைய ஊஞ்சற் பாடல்களில் ஒன்றையும் இறுதியில் வரும் வாழ்த்தையும் பாடி இன்புறலாம்.

"புங்கவர்கள் நால்வேத கீதம் பாடப்
புனையிழையார் பரதவித நடனம் ஆடு
மங்கலநா லிரண்டுமிரு மருங்குங் கூடு,
மாதவர்கள் சொரியுமலர் மாரி மூடச்
செங்கரங்கொண்டு அரம்பையர்சா மரங்கள் போடத்
திங்கள்படி மணிமாடத் தென்பால் மேவும்
ஐங்கரன்கண் குளமகிழ ஆடீர் ஊஞ்சல்!
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்!
சுந்தரமார் முகில்மாரி பொழிந்து வாழ்க;
சுரபிநிரை வாழ்கமன்னர் செங்கோல் வாழ்க,

மைந்தர்மனை நிதிபெருகி இல்ல றத்தின்
மனைவாழ்க மகாசைவ சமயம் வாழ்க;
சிந்தனையிற் கவலைமிடி வறுமை துன்பம்
தீர்ந்தடியார் வாழ்க; சுன்னைப் பதியும் வாழ்க;
அந்தணர்தம் கிளைவாழ்க; ஆடீர் ஊஞ்சல்
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்."

கவிராயர் தமிழிலேயன்றிச் சைவ சமயத்திலேயும், சிவனடியாரிடத்தும் பேரபிமானமும் பெரும்பற்றும் கொண்ட பெரும் புலவராவர். அவர் சைவ சமயத்தைப் பழைய பெருமை வாய்ந்த பீடத்தில் வைப்பதற்கு எடுத்த பெருமுயற்சியை, "முத்துக்குமார கவிராயர் மொய்யமர்" என்று பிற்காலப் புலவர் போற்றுவர்.

கவிராயர் சைவாபிமானம், மொழியபிமானம், ஊரபிமானம் மிக்கவர். அவர் தமக்கு முன் வாழ்ந்த புலவர்கள் சிலர் சுன்னாகத்தைப் போற்றிப் பாடிய வகையில் தாமும் தம் அபிமானந் துலங்கப் பாடியுள்ளார்.

"புன்னாக நீழலும் பொய்கை நடுவிற் பொருந்தியதும்
என்னாக ரோமஞ் சிலிர்ப்பெய்த வெங்கர னெய்தியது
முன்னாக நாடி யரியர னீன்ற முதல்வன்புரம்
சுன்னாக மாமித் தினமேது சொல்லித் துதிப்பதுவே"

சுன்னாகத்து ஐயனார் தம் படைத் தலைவன் மகாகாளன் என்பாரோடு அந்தப் பதியையும் அயலூர்களையும் அன்பருளம் மகிழக் காத்து வருபவர். அவர் மீது ஊஞ்சல் பாடிய வாயால் கவிராயர் வேறு தோத்திரப் பாடல்களும் பாடியுள்ளார். அத் தோத்திர மாலைக்குக் காப்பாக, மங்கல வாழ்த்தாக சந்திரசேகர விநாயக மூர்த்தியைப் போற்றும் பாடல் படித்தின் புறற்பாலது.

"ஓங்குகரு ணையினுருவ மாங்குயில் நிகருமொழி
உமையம்மை பங்கனாம்
உத்தமனு நத்தமர வத்தமிசை வைத்தவனு
மொண்சால மரநீழலில்
தாங்களிரு வருமாண்பெ ணாங்கொலென மருவியே
சரமசர முய்யமகவாய்த்
தந்திடச் சுன்னைநகர் வந்திரட் சிக்குமா
சாத்தவருண் மூர்த்தி மீது
தேங்குமது ரத்தமிழி னாசிரிய மோதவென்
சித்தத்து ணித்தமுறையும்
திகழுமரு மறைமுதற் பிரணவத் துருவான
சிற்பர னான்கினுடனே

தாங்குமொரு கையன்முரு கையனுய்யக்குறத்
தையன்மை யற்குதவினோன்
சந்திரசே கரானந்த சிந்துரா னானஞான
தற்பரன் பொற்பாதமே"

தனிப்பாடல்கள் தாராளமாகப் பாடியமை

கவிராயர் அவர்கள் தம் அறிவாற்றலுக்கேற்பப் பெருநூல்கள் எவையும் செய்யவில்லை. அவர் பெரும்பாலும் பல தனிப் பாடல்களே செய்துள்ளார். அன்றி ஊர்கள் தோறும் பல தலங்களுக்கு ஊஞ்சல் பதிகம் என்னும் சிறு பிரபந்த வகைகள் பல பாடியுள்ளார்.

அக் காலத்துக் கிறிஸ்து மதப் போதகர்கள் வரம்பு மீறிச் சைவ சமயத்தைத் தாழ்த்திப் பேசிப் பொன்னும் பொருளும் உண்ணும் உணவும் உடுக்க உடையும் கொடுத்து ஏழைகளைத் தம்மதத்தில் சேர்த்த தவறான போக்கை வெகுவாகக் கண்டித்துப் பாடி வந்தார்.

சனரஞ்சகமாக எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் இவர் பாடிய பாடல்கள் கும்மி வகையைச் சேர்ந்தவை. பெண்கள் கூடிக் கைதொட்டிப் பாடியாடும் வகையில் இவர் ஞானப் பெண்ணே! என விளித்துப் பாடிய பாடல்களே ஞானக்கும்மி என்னும் தொகுதியாகும்.

கவிராயர் ஞானக் கும்மி, யேசுமத பரிகாரம், ஐயனார் ஊஞ்சல், நடராசர் பதிகம் என்பனவோடு பல தனிப் பாடல்களும் பாடியுள்ளார். இவற்றுள் ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம் என்பவை அக்காலத்து கிறிஸ்தவ போதகர்கள் சைவத்தைப் பரிகாசம் செய்து குறைத்துப் பேசி பிரசாரஞ் செய்தமையைப் பொறாது, சைவத்தை விளக்குவதற்காகப் பாடியவையாகும்.

இவற்றுள் சில பாடல்கள் நகைச் சுவையாயும், நக்கல் கிண்டல் ததும்ப அக்காலத்து வெள்ளைக்காரப் பாதிரிமாரின் போக்கைக் கண்டிப்பனவாயும் உள்ளன.

வெள்ளைக்காரப் பாதிரிமார் தம்மைத் தேசிகர் எனக் கூறிக்கொண்டு, தேசிகர்க்குரிய ஆசார அநுட்டானமின்றி வாழ்ந்தமையையும் குறிப்பிடுவர். காலைக்கடன் முடித்ததும் கால் கழுவாமல் கடதாசியால் துடைக்கும் வழக்கத்தைக் கவிராயர் கடுமையாகக் கண்டிப்பர்.

"மாசார் மலத்தை விடுத்துக் குதத்திடை
மண்ணிட்டு நீர்கொண்டு சௌசஞ் செய்யாதவர்
தேசிக ராம்பரி சுத்தரு மாமினிச்
செய்புவ தேதடி ஞானப் பெண்ணே"

கவிராயர் ஞானக்கும்மி பாடும்போது எடுத்த எடுப்பிலே "சீர்கொண்ட வேதாகமங்களைப் பொய்யென்று செப்பு மிலேச்சர்" என்று புறச் சமயத்தாரைக் குறிப்பிடுவர். தொடர்ந்து மதவிகற்ப இயல்பு, யெகோவா இயல்பு, யேசு இயல்பு, பரிசுத்த ஆவி இயல்பு, சீவனியல்பு, கிரியை இயல்பு, நரக இயல்பு, முத்தி இயல்பு, மோசே முதலியோர் இயல்பு, கிறிஸ்தவர்கள் இயல்பு என்னும் பல தலைப்புகளில் பலவித பாவினங்கள் விரவிவரப் பாடியுள்ளார். இவற்றுள் ஓசை நயமும் சொல்லலங்காரமும் பொருளடர்த்தியுள்ள ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, கலிவிருத்தம், கலித்துறை, வெண்பா முதலிய பாவினங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறாக இவர் 116 பாடல்கள் அருமையாகப் பாடியுள்ளார்.

சைவர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவில் நம்பிக்கை கொண்டு தீர்த்தமாடுதலை விசேடமாகக் கருதி சென்றாடு தீர்த்தம் எனப் போற்றுவதைப் புறச் சமயத்தவர் பழித்துவிட்டு, நீரைக் கிள்ளித் தெளித்து ஞானஸ்நானம் செய்வது எதற்கு என்றெல்லாம் கவிராயர் சாடியுள்ளார்.

சைவர்கள் திருக்கோயிலை மையமாகக் கொண்டு தங்கள் வாழ்வை வளம்படுத்தி உய்தி பெறுவதை, பிரதிஷ்டாதி உற்சவாந்தம்; உற்சவாதி பிராயச்சித்தம் என்று பயபக்தியுடன் கொண்டாடுவர். இவ்வாறாகப் புற மதத்தவர் சைவரின் பிரதிஷ்டாதி கிரியைகளைக் குறைகூறப் பொறாத கவிராயர் பாடுவர்.

"மேலான கோயிற் பிரதிட்டை யேனென்று
வீண்பழி சொல்வார் சலோமோ னெனும் வேந்தன்
ஆலயங் கட்டிப் பிரதிட்டை செய்த
தறிகில ரோவெடி ஞானப் பெண்ணே"

இங்ஙனமாகவே யேசு மதபரிகாரம் என்னும் தொகுதியும் ஆசிரிய விருத்தத்தாலமைந்த இருபத்து நான்கு பெரிய பாடல்களைக் கொண்டதாகும். இப்பாடல்கள் தோறும் ஈற்றடியாக "அமல பூரண சுத்த சச்சிதானந்த மயமாம் சிவனை அறிவதறிவே" என்னும் தொடர் விரவிவரப் பாடியுள்ளார்.

இன்னும் போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் அரசாண்ட அக்காலத்துக் கிறிஸ்தவ பாதிரியார் நடந்துகொண்ட வண்ணத்தைப் படம் பிடித்தாற்போலப் பாடியுள்ளார்.

"அள்ளிப்பணங் கொடுத்து ஆளேன் பிடிக்கிறார் அவர் வார்த்தை கேட்பது அறிவோ" என்றும், "அடியிலாப் புணையேறி நெடிய கடல் போகிறார். அவர் வார்த்தை கேட்பதறிவோ" என்றும், சுட்டமண்ணுடன் பச்சை மண் பரிசிக்குமோ" என்றும் "சூரியனை அங்கையால் மூடலாமோ" என்றும் "பரசமய நூல்களைத் தெய்வத்தை புத்தகங்கள் தீட்டியே கூலியாட்கள் சேர்த்து வைத்தெங்குங் கொடுக்கிறார், தமது

தேசிகன் மொழி மறந்தார்" என்றும் "அருட்டுறையின் வழி சற்று மலியாமலலைகிறாரவர். வார்த்தை கேட்பதறிவோ" என்றும், "தங்கள் சபையிடை சேர்ந்து யேசுமதமல்லாது சற்சமய மல்லையென்று சாற்றி" என்றும் பலவாறாக அக்காலத்துப் புறமதத்தவர் செயல்களைக் கண்டித்துப் பாடுவர்.

இன்று பண்பாடு பற்றிப் பேசுபவர் தாய்மொழியன்பு தாயன்பு, ஊரபிமானம், நாட்டபிமானம் என்றெல்லாம் பேசுகிறார்கள். கவிராயர் தாய்மொழியன்பும் ஊரபிமானமும் கொண்ட பெரியவர். அவரின் சமயாபிமானம் தலைசிறந்தது. அவர் சைவம் பட்ட பாட்டையும் கெட்ட கேட்டையும் கண்டும் கேட்டும் மனம் நொந்து எங்களை அடுத்துக் கெடுத்தவர்கள் கூறிய ஆசை வார்த்தைகளையும் இடையில் கைவிட்டதையும் அயலவரிடம் அநுபவரீதியில் கண்ட அமைவில் பாடிய பாடல்கள் பல. அக்காலத்து உடுவிற் பாதிரியார் ஒருவர் செய்த நீதியீனத்தை நினைத்து வருந்தி பராபரனிடமே முறையீடு செய்துள்ளார்.

"நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநா ளுந்தருகுவோம்
நாஞ்சொல் வதைக்கேளும் எனமருட்டிச் சேர்த்து
நானமுஞ் செய்துவிட்டார்
மெல்ல மெல்லப் பின்னை வேலையிங் கில்லைநீர்
வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்டு கருவாக்கி
விட்டபின் கணவன் வேலை
இல்லைநீ போவென்று தள்ளுவது போலுமே
இனிஎம்மை எம்முறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
ஏர்ப்பூட்டி உழவுமறியோம்
அல்லலாம் இம்மைக்கு மறுமைக்கு நரகினுக்(கு)
ஆளாகி மிகஅழிந்தோம்
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே.

வண்டியேன்? மஞ்சமேன்? கதிரையேன்? குதிரையேன்?
வாங்கு மெத்தைகள் சிவிகையேன்?
வட்டித்த கவிகையேன்? மல்லிகைச் செடிகளேன்?
வாழை கமுகுயர் தோட்டமேன்?
பெண்டிரேன்? பிள்ளையேன்? திரவியத் தோட்டமேன்?
பேணிவரு காணியினமேன்?

பேரின்ப ஞானவழி இதுகொலோ? யேசுவும்
பின்பற்று சீடருங்கைக்
கொண்டதோ இவையெலா மவர்நின்ற ஞானவழி
கூறிநற் புத்தி சொல்லிக்
குணமாக்க வல்லஇவர் பணமாக்க வந்தது
குறிப்பறிந் தும்வறுமையால்
அண்டினோம் உண்ணவும் உடுக்கவும் வாழவும்
அதற்குமங் கிடமில்லையே
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே."

சனரஞ்சகமாகவும் பாடியமை

கவிராயர் அவர்கள் முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகர் என்று பெயரெடுத்தவர். அவர் செந்தமிழ் மணக்குமாறு சிந்தைக்கினிய கப்பல் பாட்டும் பாடியுள்ளார். தம் பெயராலே ஒரு கப்பல் ஓட்டியதாகக் கற்பனைக் கடலில் அதனை யொட்டிப் பாடியுள்ளார். மக்களிலக்கியமாக அது போற்றப்பெற்றது.

ஏலேலோ ஏலஎலோ ஏலேலோ ஏலஎலோ
ஆதிபூரம் சோதிவஸ்து தந்தத்தைய
முக்கண் ஐயன் வெள்ளைவிடை ஊர்த்திக்கு
மாதவத்தோன் பணியாதம் அம்பலவாணன் மகன்
கப்பலிது இந்தத்தையா.

மங்கையர்க் கானஒரு மஞ்சட் சிவப்பு
மைக்கூடு கண்ணாடி வண்ணவளை சீப்பு
கெங்கைக் கிசைந்தவொரு குத்தா றவுக்கை
குங்குமம் செம்பவளக் கஸ்தூரி மஞ்சள்
ஏலேலோ ஏலஎலோ
திங்கள் நுதலுக்கான திலக செந்தூரம்
செம்பஞ்சு திருநாமத் தாசிலாப் பொடியும்
கொங்கு வங்காளத்தில் விலைநலம் பேசிக்
குமரவேள் கப்பல் கொண்டு வருகுது அப்பா,

ஏலேலோ ஏலஎலோ

கவிராயரின் கவித்துவம்

கவிராயர் பாடிய பாடல்களுள் நடராசர் பதிகம் கிடைக்கவில்லை என்பர். அவர் தோத்திர ரூபமாகப் பல தலங்களிற் பாடிய பாடல்கள் பெரும்பாலானவை கிடைத்துள்ளன. இவற்றையெல்லாம் திரட்டி "முத்தகப் பஞ்சவிஞ்சதி" என்னும் தலைப்பில் கவிராயர் வழிவந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் 1907ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

பின்னர்க் கவிராயர் மறைந்த நூற்றாண்டின் நினைவாகப் புலவரவர்களின் புதல்வர்களிலொருவராய முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், கவிராயர் நூல்களைப் பிரபந்தத் திரட்டு என்னும் தலைப்பில் 1952ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார்.

கவிராயரின் கவித்துவம் பற்றி அன்று வெளிவந்த பதிப்பில் அருமையாகக் கூறப்பெற்றுள்ளது. "பாக்கள் எல்லாம் சொல்லும் பொருளும் சுவைபட நல்லிசையோடு கூடிப் படிப்பவர் மனத்தை மகிழ்விக்கும் தன்மையுடையன. மடக்கலங்காரம், நாமாந்தரிகை, சங்கியாதை, வியற்கிராந்தை முதலியன பல அணிகள் இவருடைய பாடல்களில் நூதனமாக அமைந்துள்ளன.

வாழ்க்கைக் குறிப்பு

கவிராயர் முதலில் வண்ணையைச் சேர்ந்த நீர்வாவியடியில் இரகுநாதர் என்னும் புகழ்பெற்ற சிறப்பரின் குடும்பத்தில் திருமணஞ் செய்தபின், சுன்னாகத்தைச் சேர்ந்த கதிராசி என்னும் மாதை மணந்து, வள்ளியம்மை, யோகம்மா, சின்னம்மா, பொன்னம்மா என்னும் நால்வர் பெண்களைப் பெற்றார் என்ப. இப்பெண்கள் சந்ததியில் வந்தவர்களும் ஓரளவு புலமை பெற்றவர்களாயிருந்தார்கள் என்ப. கவிராயர் 1852ஆம் ஆண்டு வரை வாழ்ந்து செந்தமிழ் வளர்த்தார் என்பது வரலாறு.

"புவிப் புலவர் கேட்டு நனிமேவுஞ் சுவை மகிழப் பொன்னார் நாட்டில்" கவிச்சுவை ததும்பப் பாடியபாவாணர் வரிசை சிறக்கத் தமிழ் வளர்த்த செம்மல்கள் வரிசையில் முத்துக்குமார கவிராச சேகரமும் ஒருவராவர். "முத்துக்குமார கவிராயன் பாடலென் மூதருஞ் செல்வத்துக்கு வாய்த்த பொன் மண்டலமீழநன் மண்டலமே" என்று ஈழமண்டல சதகம் புகுழ வாழ்ந்தவர் கவிராயர் என்க.

நகுலேசரூஞ்சல்

சுன்னாகம் குமாரசாமிப்புலவர்

காப்பு

சீர்கொண்ட யாழ்ப்பாண தேசந் தன்னிற்
சிறப்பமருங் கீரிமலைச் சாரல் வாய்ந்து
நீர்கொண்ட சாகரசங் கமமே யான
நின்மலபுண் ணியதீர்த்தக் கரையின் மேவும்
பேர்கொண்ட நகுலேசப் பெருமான் மீது
பெட்புறுசெந் தமிழ்க்கவிதை யூஞ்சல் பாடக்
கார்கொண்ட யானைமுக முடைய முன்னோன்
கமலமல ரடியிணைகள் காப்ப தாமே. 1

செங்கனக மேருவெனத் தூண்க ணாட்டிச்
செய்யமர கதப்புதிய விட்ட மாட்டிப்
பங்கமிலா முத்துமணிக் கயிறு பூட்டிப்
பத்தரைமாற் றுயர்தங்கப் பலகை கூட்டி
இங்குளசித் திரமெல்லாம் விளங்கத் தீட்டி
யியற்றிடுமூஞ் சற்பீடத் தினிது வைகி
நங்கைநகு லாம்பிகையோர் பாங்கர் மேவ
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 2

சூரியனுஞ் சந்திரனுங் கவிகை தாங்கச்
சுந்தரமா ருதன்கரத்திற் கவரி யோங்க
வாரிதியின் கோமகன்சாந் தாற்றி வாங்க
மகபதிகைத் தலத்தால வட்டந் தூங்கக்
காருலவு மொலியெனவாச் சியங்க ளோங்கக்
காசினியிற் பிணிவறுமை யாவு நீங்க
நாரிநகு லாம்பிகையோர் பாங்கர் மேவ
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 3

வித்தகமா மறையாளர் மறைக ணாட
மெய்யடியா ரரகரவென் ரருகு கூடக்
கொத்துலவு மலர்க்குழலார் நடன மாடக்
குலவுபல வாச்சியங்க ளொலியி னீடப்
பத்தர்கள்செந் தமிழ்வேதம் பண்ணிற் பாடப்
பாருலகிற் றுன்பமெலாம் நீங்கி யோட
நத்தமருஞ் சாகரசங் கமநீர் மேவும்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 4

சங்குதுடி பேரிமுத லியங்க ளார்ப்பச்
சகலவுயிர்த் தொகுதிகளும் மகிழ்ச்சி கூர்ப்பப்
புங்கவர்கண் மலர்மாரி யெங்குந் தூர்ப்பப்
புத்திசைசேர் யாழினொலி சித்த மீர்ப்ப
அங்கமெலா மடியர்குழாம் புளகம் போர்ப்ப
அரகரவென் றன்பினொடு மங்கை கூப்ப
நங்கணகு லாம்பிகையோர் பாங்கர் மேவ
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 5

வாரணசங் கமதீர்த்தத் தன்பி னோடும்
வந்துபடி வோர்நிதமுந் தெரிசித் தேத்திப்
பூரணமா யிட்டசித்தி யாவு மெய்தும்
பொருட்டாக வாகமங்கள் பலவு நாடிச்
சீரணவு சிற்பமுறை செய்யப் பெற்ற
திருப்பணிசேர் திருக்கோயில் சிறந்து மேவி
நாரணனு மாரணனும் பாங்கி னேத்த
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 6

இச்சகத்திற் றனைநினைவோ ரிடரை நீக்கு
மேகதந்த விநாயகமுக் கண்ண னோடு
பச்சைமயில் வாகனனும் பாங்கர் மேவப்
பண்ணவராம் விண்ணவர்பல் லாண்டுசொல்ல
அச்சுதனுஞ் செங்கமலத் தயனும் வாழ்த்த
வம்பொன்மய வம்பலத்தி னருளே பூண்டு
நச்சரவக் கச்சலசத்து நடன மாடும்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 7

நெஞ்சமொழி காயமிவை கடந்து நின்ற
நின்மலசின் மயவடிவே யெனினும் பாச
புஞ்சமுறு மாருயிருக் கிரங்கி நாளும்
புத்திமுத்தி கொடுத்தருளும் பொருட்ட தாக
எஞ்சலிலாத் திருக்கோயிற் பதிட்டை செய்த
விலிங்கமெனுந் திருமேனி யினிது கொண்டு
நஞ்சமுது கொண்டவரே யாடீ ரூஞ்சல்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 8

யானையுரி யுடையாரே யாடீ ரூஞ்சல்
எப்பொருளு முடையாரே யாடீ ரூஞ்சல்
மானமருங் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
மந்திரவக் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
வானமதிக் கண்ணியரே யாடீ ரூஞ்சல்
வழுத்துபவர்க் கண்ணியரே யாடீ ரூஞ்சல்
ஞானபரி பூரணரே யாடீ ரூஞ்சல்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 9

வாழி

சந்தமறை யாகமசாத் திரங்கள் வாழி
சாருமறை யாளரொடு பின்னோர் வாழி
சுந்தரமா முகில்வாழி செங்கோல் வாழி
தூயமட மகளிர்பதி விரதம் வாழி
சிந்தைமகிழ் பூசைவிழ வோடு கோயிற்
றிருப்பணிக்குப் பொருளுதவி செய்வோர் வாழி
நந்தநகு லாம்பிகையா மம்மை யோடு
நகுலகிரி நாயகரே வாழி வாழி.

கன்னியா வெந்நீரூற்று

கன்னியா நீரூற்றைப் பற்றிப் புராணங்கள் கூறும் திவ்விய வரலாற்றின்படி மகாவிஷ்ணுமூர்த்தியே அவற்றை உற்பத்தியாக்கினார். கோணநாயகரிடந் தான் பெற்ற இலிங்கத்தைக் கையிலேந்திக் கொண்டு இராவணன் செல்லும்போது விஷ்ணுமூர்த்தியொரு அந்தண வடிவம் எடுத்துத் தசக்கிரீவனைச் சந்தித்து அவன் தாயாகிய கைகேயி உயிர்நீத்த செய்தியைத் தெரிவித்தார். இலங்கைக் காவலன் அதைக் கேட்டதும் துக்கக் கடலிலாழ்ந்தான். முனிவர் அவனைத் தேற்றியபின் தனையன் தாய்க்குச் செய்யவேண்டிய கன்மாதிக்கிரியைகளைச் செய்யுமாறு நினைவுறுத்தினார். இப்புண்ணிய தலத்தில் கன்மாதிக் கிரியைகளைச் செய்தால் அவர் மோக்ஷ வீட்டை அடைவது திண்ணம் என்று கூறினார்.

அவ்வந்தணரே அதைச் செய்து முடிக்கவேண்டும் என்று இராவணன் வேண்ட அதற்குச் சம்மதித்த அந்தணர், அவனை அழைத்துக் கொண்டு திருகோணமலைக்கு மேற்கிலுள்ள கன்னியா என்னும் தலத்திற்குச் சென்று அவ்விடத்தில் தமது கையிலிருந்த தண்டினால் ஏழிடத்தில் ஊன்றினார். அந்தண வடிவங்கொண்ட மகாவிஷ்ணு ஊன்றிய ஏழிடங்களில் நீரூற்றுத் தோன்றின என்று புராணங்கள் கூறுகின்றன. இறந்தவர்களுக்கு அவ்விடத்தில் அந்தியேட்டி செய்யப்படின் அவ்வான்மாக்கள் முத்தியடையுமென நம்பப்படுகின்றது. இராவணன் தனது தாயாருக்குரிய கன்மாதிக் கிரியைகளெல்லாவற்றையும் முறையே செய்தபின் அவ்விடம் விட்டேகினான்.

சேரன் செங்குட்டுவன் வடக்கே சென்று கனக, விசயரை வெற்றிகொண்டு தென் தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்தாம் கண்ணகிக்குச் சிலையெடுக்க இமயத்திலிருந்து கல் கொண்டுவந்து கோவில் அமைத்து விழாவெடுத்த காலை கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும் விழாவுக்குச் சென்றிருந்தான். ஈழநாட்டில் கண்ணகி வழிபாட்டைக் கயவாகு மன்னன் பரப்பினான். ஈழநாட்டில் கண்ணகி வழிபாடே ஒரு இயக்கமாயிற்று.

கண்ணகி கோவில் திருக்கோணமலையில் கன்னியாவில் அமைந்திருக்கலாம். "கண்ணி என்ற சொல்லே காலப்போக்கில் திரிந்து கன்னியாவாயிற்று" என்று டாக்டர் மு. வரதராசன் கூறுகின்றார். ஈழநாட்டில் கண்ணகி வழிபாடே காலப்போக்கில் மாரியம்மன் வழிபாடாகவும் திரௌபதையம்மன் வழிபாடாகவும் மாறியதென்பது சிலர் கருத்தாகும். இக்கருத்து சிந்தனையைத் தூண்டும் செய்தியாக அமைகின்றது.

கன்னியா நீரூற்றின் ஆதி வரலாற்றை அறிவது அரிதினும் அரிது. இலங்கை அரசாங்கத்தின் தாதுப் பொருட்டுறைப் பொறுப்பாளர் திரு.சி.எச்.எஸ் சிறிமான் இந்நீரூற்றுக்களை 1954-ம் ஆண்டில் ஆராய்ந்து பின்வருமாறு கூறியுள்ளார். "நிலத்தின் கீழுள்ள நீர்மட்டம் தரையின் மேற்பரப்பைச் சந்திக்கும் இடத்தில் இயற்கையாக நீரூற்று ஏற்படும். நீர் ஒரே நிலையில் நிற்பதில்லை. மழை வீழ்ச்சியின்பின் நீர்மட்டம் உயர நீரூற்று அதிகரிக்கும். வரண்ட காலத்தில் மழை வீழ்ச்சி குறைய நீர்மட்டம் தாழ நீரூற்றுக் குறையும்."

சுவரால் அடைக்கப்பட்ட எல்லையுள் பூமியினூடே செல்லும் நீரோட்டத்தின் படுக்கை இருப்பதாக அவர் கருதுகின்றார். ஆயினும் அதன் எல்லைக்கு வெளியிலும் நீரூற்று இருக்கின்றது. மாரிகாலத்தில், தரைமட்டத்தின் கீழுள்ள நீர் உயர்வதனால் அப்பகுதியெங்குஞ் சிறுநீரூற்றுக்கள் தோன்றும். கன்னியா நீரூற்றைக் கிணறுகள் என்பது பொருத்தமில்லை. நிலத்தைத் தோண்டுவதினால் ஏற்படும் நீரூற்றே கிணறு எனப்படும். கன்னியாவில் உள்ள நீரூற்றுக்களைச் சுற்றிச் சுவர் கட்டப்படாவிட்டால் அங்குள்ள நீரூற்று மறைந்திருக்கக்கூடும். அக்கிணற்றுக் கட்டுகளுக்கு மேலாக நீர் மேவிப் பாய்வதில்லை. ஆயினும் நீரை அள்ள அள்ள ஊறிக்கொண்டேயிருக்கின்றது. எனவே நீரூற்றுக்கு உற்பத்திக் காரணமாக இருக்கும் ஆறு சிறியதாகவே இருக்கவேண்டும். இது வெந்நீராக இருப்பதற்குக் காரணம் அவராற் கூறப்படவில்லை.

ஜோன் டேவி என்பவர் தாம் கி.பி. 1821ம் ஆண்டில் வெளியிட்ட "இலங்கையின் உட்பகுதியின் விபரம்" என்னும் நூலில் அக்காலத்தில் கன்னியா நீரூற்று இருந்த நிலைமையை வருணித்துள்ளார். 1817ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் திகதி காலை ஏழு மணிக்கு ஏழு கிணறுகளில் உள்ள வெந்நீரின் வெப்பம் பின்வருமாறு :

101°, 101.5°, 107°, 88.5°, 86°, 105.75°, 91° எனவே மிகவும் கூடிய வெப்பம் 107°. மிகக் குறைந்த வெப்பம் 88.5°. அன்று காலை 10 மணிக்கு வெப்பத்தை அளவையிட்டபொழுது அவை முறையே பின்வருமாறு இருந்தது. மூன்றாவது கிணறு 107° யிலிருந்து 103° ஆகவும், ஆறாவது கிணறு 105.75° யிலிருந்து 102° ஆகவும் இருந்ததாகக் கூறியுள்ளார். அன்று 7 மணிக்குப் பவனத்தின் வெப்பம் 77° ஆக இருந்தது. 10 மணிக்கு 80°ஆக இருந்தது. எனவே பவனத்தின் வெப்பம் அதிகரிக்க வெந்நீரின் வெப்பம் குறைந்து கொண்டே சென்றது. அதனுடைய மருத்துவப் பயனைப் பற்றியும் கூறியுள்ளார். 'The water is used chiefly for rheumatism and Cutaneous diseases." அந்நீர் வாத சரும நோய்களுக்கு உபயோகிக்கப்படும். இதற்குக் காரணம் அந்நீரிலுள்ள இரசாயனப் பொருட்களே. கன்னியா ஊற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீர் கண்டியிற் பரிசோதிக்கப்பட்ட பொழுது அதில் சொற்ப உப்பு கார்பனிக்கமிலவாயுவும், நைட்ரஜினும் காணப்பட்டன.

வெந்நீரின் கூட்டிற்கு அவர் கொடுக்கும் காரணம் சிந்திக்கற்பாலது. 'The probability is that all the wells are supplied with water from the same source. The Circumstances of their temperature being different at first view, appears to be in opposition to this idea but it may be easily reconciled by taking into account the quantity of water discharged, which is greatest in the hotsprings, excepting in one instance in which the air disengaged, in the operation of raising the temperature, may be considered as a substitute for the water."

"ஒரே ஊற்றிலிருந்து எல்லாக் கிணறுகளுக்கும் நீர் ஊறுகின்றது. நீரூற்றுக்களின் வெப்பநிலை ஏற்றத்தாழ்வாக இருப்பதால் முன்கூறிய கருத்து மாறுபாடாகத் தோன்றுகின்றது. வெப்பமான நீரூற்றிலிருந்து சுரக்கும் தண்ணீரின் அளவு ஏனைய ஊற்றுக்களிலிருந்து வரும் நீரைவிட அதிகமாக இருக்கின்றது. ஒரு கிணற்றில் அதிகமாகக் குமிழி வருகின்ற காரணத்தால் இதற்கு விதிவிலக்காக அமைகின்றது.

இக்கருத்து எவ்வளவிற்குப் பொருத்தமானதென்பது ஆராய்ச்சிக்குரியது. இன்றைய நிலையில் விஞ்ஞானம் காரணம் கூறமுடியாது தவிக்கின்றது.

1817–ம் ஆண்டில் சுற்றுமதில் செங்கல்லாற் கட்டப்பட்டு ஆறடி உயரமுடையதாக இருந்தது. கிணறுகளைச் சுற்றிச் சுவர் கட்டப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு கிணற்றைச் சுற்றியும் கருங்கல் குவிக்கப்பட்டிருந்தன. நால்வரைக் கொண்ட ஒரு புனருத்தாரண சபை 1923–ம் ஆண்டில் சுற்றுமதிலை உயர்த்தியும், கிணறுகளைக் கட்டியும் முடித்தனர். அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்பவர்கள் பண்டாரவண்ணான் மடத்திலும் பஞ்சநாதக் குருக்கள் மடத்திலும் தமது கடமையைச் செய்தனர்.

இத்தலம் இஸ்லாமியருக்கும் ஒரு புண்ணிய தலமாக விளங்குகின்றது. அங்கு "தக்கியா" என அழைக்கப்படும் ஒரு இஸ்லாமிய பள்ளிவாசல் இருக்கின்றது. மேலும் மலையின் உச்சியில் "நாற்பதடி ஆண்டவர்" எனவழைக்கப்படும் ஒரு சமாதியுண்டு. அதில் 40 அடி நீளமுள்ள ஒரு அரேபிய ஞானி புதைக்கப்பட்டிருப்பதாக நம்மப்படுகிறது. இதன் சரித்திரம் நான்கு நூற்றாண்டிற்கு மேற்பட்டதென கர்ணபரம்பரையாக நம்பப்படுகின்றது. இஸ்லாமியர்கள் கந்தூரிகளுக்கும் ஏனைய கொண்டாட்டங்களுக்கும் அங்கு செல்வார்கள்.

கன்னியாவிற்குச் செல்பவர்கள் பிள்ளையாருக்கு வணக்கம் செலுத்தி வந்தனர். ஆங்கு பொங்கிப் படைத்தும் கற்பூரங் கொழுத்தியும் அடியார்கள் வழிபட்டனர். இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன் அங்கு சென்றவர்கள் வட்டவடிவமான ஒரு கல்லையே பிள்ளையார் சின்னமாக உபயோகித்து வந்தனர்.

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் அங்கு ஒரு கோயில் அமைக்கப்பட்டது. ஆயினும் அக்கோவிலில் நாளாந்த ஆராதனைகள் தவறாது நடந்ததாகத் தோன்றவில்லை. அங்கு செல்பவர்கள் விநாயகர் சந்நிதியின் முன்பு வழிபாட்டைச் செய்து செல்வது வழக்கம்.

அது நெடுங்காலமாகத் திருக்கோணமலை மாரியம்மன் கோவில் ஆதனமாக இருந்ததென்று கருதுகின்றனர். இதை மறுத்துக் கூறுபவர்களும் உண்டு. இன்று அது உப்புவெளிக் கிராமச் சங்கத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. அவர்கள் ஒரு மடத்தை அமைத்து அங்கு நீராடச் செல்பவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் உண்டாக்கியுள்ளனர்.

மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணி புனைந்த
அணியே, அணியும் அணிக்கு அழகே, அணுகாதவர்க்குப்
பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெரு விருந்தே,
பணியேன், ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்தபின்னே.

பொருள் :

அபிராமித் தாயே! மணியாக விளங்குபவளே! அம்மணியில் உண்டாகும் ஒளியாகவும் விளங்குபவளே! ஒளி பொருந்திய நவமணிகளால் இழைக்கப்பட்ட அணியாகவும், அந்த அணிக்கு அழகாகவும் திகழ்பவளே! நின்னை அணுகாதவர்க்குப் பிணி என நிற்பவளே! நின்னை அண்டிவரும் பாபாத்துமாக்களின் பிணிக்கு மருந்தாகவும் நிற்பவளே! தேவர்களுக்கு பெரும் விருந்தாய்த் தோன்றும் அன்னையே! நின் அழகிய தாமரை போல் உள்ள சேவடியைப் பணிந்த பின்னே, வேறு ஒரு தெய்வத்தை வணங்க மனத்தாலும் நினையேன்.

- அபிராமி அந்தாதி (24)

துர்க்காதேவியின்
மேல்திசைக் கோபுரத்துக்கான
நிலையக்கால் நாட்டும் வைபவம்

துர்க்காதேவியின் வடதிசை குபேரவாசல் கோபுரம்

28.1.2018

Print Master. T.P. 021-205 3322